**செ.வெ.எண்: 24** **நாள்: 12.07.2016**

## புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலை மூலம் ஒவ்வொரு மாதமும் ரூ.470 இலட்சம் மதிப்பீட்டில் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது - மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் தகவல்

--------

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் துரையரசபுரம் கூட்டுறவு நூர்பாலை வளாகத்தில் இன்று (12.07.2016) மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சு.மாரிமுத்து அவர்கள் தலைமையில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாட்டினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்த்துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவு நூற்பாலையின் செயல்பாட்டினை பார்வையிட்டு பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூர்பாலை 6வது 5 ஆண்டு திட்டகாலத்தில் தமிழக அரசால் 1982 ஆண்டு ரூ750 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 25,080 கதிர்கள் இயந்திரதிறன் கொண்டு துவங்கப்பட்டது. வணிகரீதியான உற்பத்தியை 01.01.1985 முதல் துவக்கி செயல்பட்டு வருகிறது. இந்த ஆலை 23.47 ஏக்கர் நிலப்பரபளவை கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் ரூ.177 கோடி மதிப்பீட்டில் 7 கூட்டுறவு நூர்பாலைகள் செயல்பட்டு வருகிறது.

இதில் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி கூட்டுறவு நூர்பாலைக்கு ரூ.30.41 கோடி திட்ட மதிப்பீட்டில் நவீன மயமாக்கல் திட்டம் அமல்படுத்தப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 13.11.2015 அன்று திறந்து வைக்கப்பட்டது. இதன் மூலம் இந்த கூட்டுறவு நூற்பாலை 20976 கதிர்களுடன் இயங்கி வருகிறது. இதன் மூலம் தரமான நூல் உற்பத்தி செய்யப்பட்டு அரசு நலத்திட்டங்களான பள்ளி மாணவர்களுக்கான சீருடை மற்றும் விலையில்லா வேட்டி, சேலைகள் உற்பத்திக்கு 40s, 2/30s,2/40s சிட்டா மற்றும் கோன்நூல்கள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.470 இலட்சம் மதிப்புள்ள 200 மெட்ரிக் டன் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

அனைத்து கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு தரமான நூல் விற்பனை செய்வதன் மூலம் நெசவாளர்களின் உற்பத்தி திறன் அதிகரித்து அவர்களுக்கு கூடுதல் நெசவுக்கூலி கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகஅரசின் சிறப்பான செயல்பாட்டின் மூலம் இந்த நூற்பாலை புனரமைக்கப்பட்டு உற்பத்தி திறன் அதிகரித்து நடப்பாண்டில் இலாபகரமாக இயங்கி வருவதுடன் இனிவரும் காலங்களில் கூடுதல் இலாபத்தினை ஈட்டும் வகையில் அனைத்து தொழிலாளர்களும் சிறப்பாக பணிபுரிய வேண்டும் என்றும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி, அறந்தாங்கி ஒன்றியக்குழுத்தலைவர் (பொ) திரு.பெரியசாமி, வீட்டு வசதி சங்கத்தலைவர் திரு.டி.கூத்தையா, நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.க.சிவசண்முகம், நூற்பாலை மேலாண்மை இயக்குநர் திரு.கு.பெரியசாமி, வட்டாட்சியர் திரு.மணிவண்ணன், நூற்பாலை தலைவர் திரு.என்.மாதேஸ்வரன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**